ஒட்டன்சத்திரத்தில் நவ. 20–இல் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டம்

திண்டுக்கல், நவ. 8: ஒட்டன்சத்திரம் வட்டத்தில் 'உங்களைத் தேடி, உங்கள் ஊரில்' திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதை அடுத்து, வருகிற 13–ஆம் தேதி முதல் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெறப்படுகின்றன.

இதுதொடர்பாக திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் மொ.நா. பூங்கொடி வெளியிட்ட செய்திக் குறிப்பு: திண்டுக்கல் மாவட்டத்தில் 'உங்களைத் தேடி, உங்கள் ஊரில்' திட்டம் 8–ஆவது கட்டமாக வருகிற 20–ஆம் தேதி ஒட்டன்சத்திரத்தில் செயல்படுத்தப்படுகிறது. இதையொட்டி, வருகிற 13–ஆம் தேதி ஒட்டன்சத்திரம், சின்னக்காம்பட்டி, புலியூர்நத்தம், கள்ளிமந்தையம், தேவத்தூர் வருவாய் ஆய்வாளர் அலுவலகங்களில், அந்தந்த உள்வட்டத்துக்குள்பட்ட கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெறப்படுகின்றன.

மேலும், வருகிற 20–ஆம் தேதி முகாம் நடைபெறும் நாளிலும், அந்தந்த கிராமங்களுக்கு ஆய்வுக்காக நியமிக்கப்படும் அலுவலர்களிடமும் மனு அளித்து பயன்பெறலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

போக்சோ சட்டத்தின் கீழ் 3 சிறுவர்கள் மீது வழக்கு

தேனி, நவ. 8: தேனியில் அரசுக் கல்வி விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவருக்கு பாலியல் தொந்தரவு அளித்த சக மாணவர்கள் 3 பேர் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வெள்ளிக்கிழமை போலீஸார் வழக்குப் பதிந்தனர்.

போடி அருகேயுள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த 10 வயது சிறுவன் தேனியில் உள்ள அரசு கல்வி விடுதியில் தங்கியிருந்து 5–ஆம் வகுப்பு படித்து வருகிறார். இவருக்கு அதே விடுதியில் தங்கிப் படிக்கும் முறையே 12, 13, 14 வயதுடைய 3 சக மாணவர்கள் பாலியல் தொந்தரவு அளித்ததாகக் கூறப்படுகிறது. இதையடுத்து, சிறுவனுக்கு பாலியல் தொந்தரவு அளித்த மாணவர்கள் 3 பேர் மீது தேனி மகளிர் காவல் நிலைய போலீஸார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

பைக்– ஆட்டோ மோதல்: தொழிலாளி உயிரிழப்பு

பழனி, நவ. 8: பழனி அருகே ஆட்டோவும், இரு சக்கர வாகனமும் மோதிக் கொண்டதில் தொழிலாளி உயிரிழந்தார்.

உயிரிழந்த சங்கர்.

பழனியை அடுத்த பள்ளிக்கூடத்தான் வலசைச் சேர்ந்த பொன்னுச்சாமி மகன் சங்கர் (39). திருமணமாகாதவர். இவரது நண்பர் சின்னத்துரை (35). கூலித் தொழிலாளர்கள். இவர்கள் இருவரும் வெள்ளிக்கிழமை பள்ளிக்கூடத்தான் வலசில் உள்ள ஒரு தோட்டத்துக்கு இரு சக்கர வாகனத்தில் சென்று விட்டு பிரதான சாலையில் வந்து கொண்டிருந்தனர். அப்போது அமரபூண்டியிலிருந்து பழனி நோக்கி வந்த ஆட்டோ, இரு சக்கர வாகனம் மீது மோதியதில் சம்பவ இடத்திலேயே சங்கர் உயிரிழந்தார். பலத்த காயமடைந்த சின்னத்துரைக்கு பழனி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு கோவைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இதுகுறித்து கீரனூர் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

Form No.12
IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS, MADURAI BENCH
(SPECIAL ORIGINAL JURISDICTION)

Today the 29th day of October Two Thousand and Twenty Four
The Honourable Mr. Justice R. Vijayakumar
Writ Petition No. 24445 of 2024
Ramakrishnan & ors ... Petitioner
Vs
The State of Tamil Nadu & ors ... Respondents

112 TAMIL NADU GOVERNMENT GAZETTE [Part III—Sec. 2 N

Whereas Writ Petition No 24445 of 2024 has been filed in the High Court of Madras praying the Hon'ble Court issue a WRIT of MANDAMUS, or any other writ, order, or direction in the nature of writ directing the official respondents to consider the writ petitioners' candidature for promotion to the post of "Inspector of Police"(G) against the available vacancies by including their name in the list of qualified candidates suitable for promotion arranged in an order of preference over and above the claim of the Havildars promoted to the post of "Sub-Inspector of Police (General)" in 2009-2010, 2010-2011 and 2018-2019 by strictly adhering to the proportional ratio (Quota) of 40:60 in which the vacancies in the post of "Sub- Inspectors" should have been filled up by way of promotion from Havildars and by direct recruitment as prescribed under Rule 7(2)(a) of the "Tamil Nadu Special Police Subordinate Service Rules, 1978 and impleading A. Kavitha, Sub-Inspector of Police, TSP II Battalion, Avadi, Chennai - 54 and M.P.Saraswathi, Sub-Inspector of Police, TSP III Battalion, Veerapuram, Chennai in a representative capacity and whereas in terms of Rule 16 of the Madras High Court Writ Rules, 2021, framed by the High Court to regulate proceedings under Article 226 of the Constitution of India, any person who considers, himself likely to be affected in the event of the Writ Petition being allowed may apply to the Court to be heard in opposition to the Writ Petition.

Notice is hereby given that any person to be heard at the hearing of the Writ Petition, may do so by entering appearance on or before 28.11.2024 and appearing in person or through counsel at the hearing on 28.11.2024 at 10.30 a.m. before the Court.

(Sd/-)
Advocate for Petitioner
N. Dilip Kumar,
Advocate
Plot No. 11, Aadhi Eswaran Nagar, Uthangudi,
Madurai - 625 107. Mobile : 9443544443

भा.क.नि. CCI A MINIRATNA COMPANY

भारतीय कपास निगम लिमिटेड
THE COTTON CORPORATION OF INDIA LIMITED
एक मिनी रत्न कंपनी (भारत सरकार का उपक्रम, वस्त्रमंत्रालय के अंतर्गत)
A Mini Ratna Company (Govt. of India Undertaking, under Ministry of Textiles)
सैटसं: 46, 4th स्ट्रीट कोतारी लेआउट, बी.आर.नगर, त्रिचि रोड, कोयंबत्तूर-641005.
(A Government of India Undertaking)
Site No: 46, 4th Street, Kothari Layout, B.R.Nagar,
Opp. Coimbatore stock Exchange Bldg., Trichy Road,
Coimbatore-641 005. Phone No.2314461

No. CCI/CBE/MKTG/2024-25 दिनांक : 08.11.2024

TENDER NOTICE FOR JOB WORK OF GINNING AND PRESSING FACTORIES THROUGH E-TENDER MODE FOR CROP SEASON 2024-25 (KHARIF SEASON)

Online e-tenders are invited from reputed Ginning and Pressing Factories for the Cotton Season 2024-25 (Kharif) in respect of Ginning and Pressing job work at various Centers under Branch Office, Coimbatore jurisdiction. Last date for submission of tender is upto12.00PM on 26.11.2024. Other details and terms & conditions of the tender can be seen from the Corporation's website www.cotcorp.org.in or Government tender portal www.eprocure.gov.in. Online tendering and registrations should be done at https://cotcorp.enivida.com.

फसल सीजन 2024-25 (खरीफ सीजन) के लिए ई-नविदिमोड के माध्यम से जनिगि और प्रेसगि फैक्टरियों के जॉबवर्क के लिए नविदा सूचना

शाखा कार्यालय, कोयमबतूर क्षेत्राधिकार के तहत वभिनि्न केंद्रों पर जनिगि और प्रेसगि जॉब वर्क के संबंध में कपास सीजन 2024-25 के लिए प्रतिष्ठित जनिगि और प्रेसगि फैक्टरियों से ऑनलाइन ई-नविदिएं आमंत्रित की जाती हैं। नविदि जमा करने की अंतमि तिथि 26.11.2024 को दोपहर 12.00 बजे तक है। नविदि के अन्य विवरण और नियम और शर्तें निगम की वेबसाइट www.cotcorp.org.in या सरकारी नविदि पोर्टल www.eprocure.gov.in से देखी जा सकती हैं। ऑनलाइन टेंडरिंग और रजिस्ट्रेशन https://cotcorp.enivida.com पर किया जाए।

उप महा प्रबंधक

திருமலைக்கேணி சுப்பிரமணியசுவாமி கோயிலில் திருக்கல்யாணம்

திருமலைக்கேணி சுப்பிரமணியசுவாமி கோயிலில் முருகப் பெருமான், வள்ளி, தெய்வயானைக்கு நடைபெற்ற திருக்கல்யாணம்.
(வலது) போடியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற திருக்கல்யாணத்தையொட்டி, தங்கக் காப்பு அலங்காரத்தில் வள்ளி, தெய்வானையுடன், சுப்பிரமணிய சுவாமி.

நத்தம்/போடி, நவ. 8: திண்டுக்கல் மாவட்டம், நத்தம் அருகேயுள்ள திருமலைக்கேணி சுப்பிரமணிய சுவாமி கோயிலில் வெள்ளிக்கிழமை திருக்கல்யாணம் நடைபெற்றது.

இந்தக் கோயிலில் கந்த சஷ்டி விழா கடந்த 2–ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவின் முக்கிய நிகழ்வான சூர சம்ஹாரம்வியாழக்கிழமைமாலை நடைபெற்றது. அப்போது, சூரர்களை சக்தி வேல் கொண்டு முருகப் பெருமான் வதம் செய்தார். இந்த நிலையில், கந்தசஷ்டி விழாவின் முக்கிய நிகழ்வாக வெள்ளிக்கிழமை காலை திருக்கல்யாணம் நடைபெற்றது. இதையொட்டி, முருகப் பெருமான், வள்ளி, தெய்வானை ஆகியோர் சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளி கோயிலைச் சுற்றி வலம் வந்தனர்.

பிறகு கோயிலில் உள்ள விநாயகர் சந்நிதி முன் மாலை மாற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதைத் தொடர்ந்து கோயில் மண்டபத்தில் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட ஊஞ்சலில் முருகப் பெருமான், வள்ளி, தெய்வயானைக்கு திருக்கல்யாணம் நடைபெற்றது. அப்போது அங்கிருந்த பக்தர்கள் அரோகரா என பக்தி முழக்கமிட்டனர். பிறகு திருமணக் கோலத்தில் சுவாமி பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

பிறகு பக்தர்கள் தட்டுகளில் வேஷ்டி, பட்டுப் புடவை, பழங்கள், பூக்கள் ஆகியவற்றை சுவாமிக்கு திருமண சீர்வரிசையாக கொண்டு வந்து காணிக்கையாக செலுத்தினர். தொடர்ந்து அவர்களுக்கு சஷ்டி மண்டபத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது.

போடி: போடி சுப்பிரமணிய சுவாமி திருக்கல்யாண நிகழ்வின் போது, பூஜையில் வைக்கப்பட்ட தேங்காய் ரூ.3 லட்சத்து மூன்றாயிரத்துக்கு ஏலம் போனது.

விழாவுக்கான ஏற்பாடுகளை பரம்பரை அறங்காவலர் எஸ்.முத்துராஜன், கோயில் தக்கார் கி.சுந்தரி, சிங்காரவேலன் பழனி பாதயாத்திரை பேரவை குருநாதர் சுருளிவேல், தலைவர்கள் ஜெயராம், முருகன், செயலர் அழகர்சாமி, பொருளாளர் செந்தில்குமார், நிர்வாகிகள், கோயில் அர்ச்சகர்கள் சோமாஸ்கந்த குருக்கள், விக்னேஸ்வரன், முருக பக்தர்கள் செய்தனர்.

ஆவணங்களின்றி இயக்கப்பட்ட 2 லாரிகள் பறிமுதல்

திண்டுக்கல், நவ. 8: கொடைரோடு அருகே முறையான ஆவணங்கள் இல்லாமல் இயக்கப்பட்ட 2 லாரிகளை பறிமுதல் செய்த போக்குவரத்து அலுவலர்கள், ரூ.2 லட்சம் அபராதம் விதித்தனர்.

திண்டுக்கல் மாவட்டம், கொடைரோடு சுங்கச் சாவடி வழியாக முறையான ஆவணங்கள் இல்லாமல் சொகுசு பேருந்துகள், லாரிகள் இயக்கப்படுவதாக போக்குவரத்து அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து, மோட்டார் வாகன ஆய்வாளர் சிவக்குமார் தலைமையிலான போக்குவரத்து அலுவலர்கள், கொடைரோடு சுங்கச் சாவடி பகுதியில் வாகனச் சோதனையில் வியாழக்கிழமை ஈடுபட்டனர்.

அப்போது தூத்துக்குடியிலிருந்து 2 லாரிகள் நிர்ணயிக்கப்பட்டதை விட கூடுதல் எடையில் சரக்குகளை ஏற்றி வந்தது தெரிய வந்தது. மேலும் இந்த லாரிகளுக்கு சாலை வரிகள் செலுத்தியது உள்பட எந்தவித ஆவணங்களும் இல்லை என்பதும் அதிகாரிகள் சோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது.

இதையடுத்து, 2 லாரிகளையும் பறிமுதல் செய்த போக்குவரத்துத் துறை அதிகாரிகள், ரூ.2 லட்சம் அபராதம் விதித்தனர்.

புதுப்பிக்க வல்ல எரிசக்தி துறையில் பயிற்சி பெற நவ. 15–க்குள் விண்ணப்பிக்கலாம்

திண்டுக்கல், நவ. 8: புதுப்பிக்க வல்ல எரிசக்தி துறையில் வேலை வாய்ப்புக்காக காந்தி கிராம கிராமியப் பல்கலை.யில் பயிற்சிப் பெற வருகிற 15–ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக காந்தி கிராம கிராமியப் பல்கலை. சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

இந்தியா 500 ஜிகாவாட் மின் சாரத்தை 2030–ஆம் ஆண்டுக்குள் புதுப்பிக்க வல்ல எரிசக்தி மூலம் உருவாக்க திட்டமிட்டிருக்கிறது. மேலும், 2070–ஆம் ஆண்டுக்குள் கரியமில வாயு வெளியேற்றத்தை பூஜ்ஜிய நிலைக்கு கொண்டு வர வேண்டும் என்ற இலக்கை நிர்ணயித்திருக்கிறது. அந்த வகையில், நாட்டிலுள்ள ஒரு கோடி வீடுகளுக்கு மேற்கூரை சூரிய மின்சக்தி அலகுகளை நிறுவி இலவச மின் சாரம் வழங்க பிரதமரின் சூர்யா கர்: முஃப்ட் பிஜ்லீ யோஜனா திட்டத்தைச் செயல்படுத்துகிறது.

எனவே எரிசக்தித் துறையில் இளைஞர்களின் பங்களிப்பை ஊக்குவிக்க மத்திய புதுப்பிக்க வல்ல எரிசக்தி அமைச்சகம், 'சூர்ய மித்ரா', 'ஜல் உர்ஜா மித்ரா', 'வாயு மித்ரா' என்ற புதிய திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டங்களை அறிவித்திருக்கிறது.

பிரதமரின் சூர்யா கர்: முஃப்ட் பிஜ்லீ யோஜனா திட்டத்தின் கீழ் மட்டும் சூரிய ஒளி மின் தகடுகளைக் கொண்ட குடியிருப்பு கூரைகள் நிறுவ சுமார் ஒரு லட்சம் நிறுவுதல் குழுக்கள் தேவைப்படுகின்றன.

இந்த இலக்குகளை அடைவதற்கும், திறன்மிக்க இளைஞர்களை பசுமை திறன் துறையில் உருவாக்கவும் முதல் முறையாக தமிழகத்தில், காந்தி கிராம நிகர்நிலை பல்கலைக் கழகத்தின் கிராமிய எரிசக்தி மையத்தை மத்திய அரசு தேர்வு செய்தது.

இதில் மாணவர்களுக்கு கட்டணமில்லாப் பயிற்சியும், உணவும், தங்குமிடமும் (3 மாத பயிற்சி மட்டும்) வழங்கப்படும். பயிற்சியின் நிறைவில் மத்திய அரசின் திறன் மேம்பாட்டுத்துறை சார்பில் தேர்வு நடத்தப்பட்டுச் சான்றிதழ் வழங்கப்படும். ஐடிஐ, பட்டயம், பொறியியல் பட்டம் படித்த இளைஞர்கள் மட்டுமே இந்தப் பயிற்சிகளைப் பெற முடியும். சூர்யமித்ரா திட்டத்தில் சூரிய ஒளி மின் தகடு அமைக்க இடம் தேர்வு செய்தல், சூரிய ஒளி மின் உற்பத்தி பாகங்களை பழுது நீக்குதல் ஆகியன பற்றி பயிற்சி அளிக்க தேசிய சூரிய சக்தி நிறுவனம் பாடத்திட்டத்தினை வகுத்திருக்கிறது. வாயு மித்ரா திட்டத்தில் காற்றாலை அமைக்க இடம் தேர்வு செய்தல், காற்றாலை பராமரிப்பு, பழுது நீக்குதல், காற்றாலையில் உள்ள மின் உபகரணங்கள் பராமரிப்பு, பழுது நீக்குதல் உள்ளிட்ட பயிற்சிகளை அளிக்க தேசிய காற்று சக்தி நிறுவனம் பாடத் திட்டத்தை உருவாக்கி இருக்கிறது. ஜல் உர்ஜா மித்ரா திட்டத்தில் சிறு, குறு புனல் மின் நிலையங்கள் பராமரிப்பு, பழுது பார்த்தல், நீரோட்டத்துடன் புனல் மின் நிலையங்களை நிறுவுதல் போன்ற பயிற்சி அளிக்க இந்திய தொழில் நுட்பக் கழகம் (ரூர்க்கி) பாடத் திட்டத்தை வடிவமைத்துள்ளது.

பிரதமரின் சூர்யா கர்: முஃப்ட் பிஜ்லீ யோஜனா திட்டத்தின் கீழ் வீடுகளுக்கு மேற்கூரை சூரிய மின் சக்தி அலகுகளை நிறுவ, பராமரிக்க 7 நாள்கள் பயிற்சி, பராமரிப்பு மேற்பார்வையிட 4 நாள்கள் பயிற்சி, 5 நாள்கள் வேலைப் பயிற்சி அளிக்கப்படும்.

இந்த பயிற்சி வகுப்புகளில் சேர விருப்பமுள்ளவர்கள், காந்தி கிராம நிகர்நிலை பல்கலைக் கழகத்தின் இணையதளத்திலிருந்து விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து வருகிற 15–ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம். முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என அதில் குறிப்பிடப்பட்டது.

பள்ளிக் கட்டடம் காணொலி மூலம் திறப்பு

சின்னமனூர் அருகே அப்பிபட்டி ஊராட்சியிலுள்ள அங்கன்வாடி மையத்தை பார்வையிட்டு ஆய்வு செய்த தேனி மாவட்ட ஆட்சியர் ஆர்.வி.ஷஜீவனா.

உத்தமபாளையம், நவ. 8: தேனி மாவட்டத்தில் ரூ. 2.75 கோடியில் கட்டப்பட்ட பள்ளிக் கட்டடம், ஆய்வகங்களை காணொலி காட்சி மூலமாக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார்.

சின்னமனூர் அருகேயுள்ள அப்பிபட்டி ஊராட்சியில் ரூ. 1.90 கோடியில் கட்டப்பட்ட பள்ளிக் கட்டடம், ஆய்வகமும், போடி அருகேயுள்ள ராசிங்காபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியில் ரூ. 42.36 லட்சத்தில் கட்டப்பட்ட 2 வகுப்பறைகளும், கூடலூர் அருகே லோயர் கேம்ப்பில் ரூ.42.76 லட்சத்தில் கட்டப்பட்ட 2 வகுப்பறைகளை காணொலி காட்சி மூலமாக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார்.

இந்த நிலையில், அப்பிபட்டி ஊராட்சியில் நடைபெற்ற விழாவுக்கு மாவட்ட ஆட்சியர் ஆர்.வி.ஷஜீவனா தலைமை வகித்தார். கம்பம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் ராமகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். பின்னர், பள்ளி மாணவர்களின் வருகைப் பதிவு, கல்வித்தரம் குறித்து நேரடியாக ஆய்வு செய்தனர்.

இதில் மாவட்ட கல்வி அலுவலர் இந்திர ராணி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

SOUTH INDIAN Bank
Experience Next Generation Banking

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., மதுரை பிராந்திய அலுவலகம்:
முதல் மாடி, YMCA பில்டிங், அல்டோரியா ஹோட்டல் எதிரில், 70 அடி ரோடு, எல்லீஸ் நகர், மதுரை, தமிழ்நாடு, Pin-625016. ro1015@sib.co.in, Ph: 0452 2300205

இ- ஏல விற்பனை அறிவிப்பு

Ref: RO-MDU/SN/E-Auc/113/2024-25 தேதி: 07.11.2024

நிதிச்சொத்துக்களின் பிணையம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையநல அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழ், பிணைய நல (அமலாக்க) விதிகள் 2002-ல் கூறப்பட்டுள்ள விதி 6(1) மற்றும் 6(2)-ன்படி அசையும் சொத்துக்களின் விற்பனைக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

1) M/s.ஸ்படிகம் மினரல் வாட்டர், (அதன் பங்குதாரர்களால் குறிப்பிடப்பட்டது) SF.No.756/1, 2A,2B-திண்டுக்கல் பிளாக், சப்புறாமன் நகர் மேற்கு எல்லை, மாலதிருஷ்ணாபுரம், திண்டுக்கல்-624005.	2) திரு.D.S.மனோகரன் @ மோகன், S/o. D.V. சுப்புறாமன், [M/s.ஸ்படிகம் மினரல் வாட்டர் பங்குதாரர்] 44/24, மெண்டோன்சா காலனி, நாகல் நகர், திண்டுக்கல்-624003.	3) திரு.M.மகேஷ்வரன், S/o. திரு.D.S.மனோகரன், [M/s.ஸ்படிகம் மினரல் வாட்டர் பங்குதாரர்], 44/24, மெண்டோன்சா காலனி, நாகல் நகர், திண்டுக்கல்-624003.

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., திண்டுக்கல் கிளையில் (Secured Creditor) அடமானம் வைக்கப்பட்டு, தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட்டின் (Secured Creditor) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் உள்ளபடியே சுவாதீனம் செய்யப்பட்டதுக்கும் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையும் சொத்துக்களை மேலே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்திரவாதி(கள்) ஆகியோர் 06.11.2024 தேதிப்படி தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட், திண்டுக்கல் கிளைக்கு (Secured Creditor) செலுத்த வேண்டிய தொகை ரூ.1,16,17,170.18-ஐ (ரூபாய் ஒரு கோடியே பதினாறு லட்சத்து பதினேழாயிரத்து நூற்றி எழுபது மற்றும் பைசா பதினெட்டு மட்டும்) பின்வட்டி மற்றும் செலவினங்களுடன் வசூலிக்கும் பொருட்டு "அது இருக்கும் இடத்திலேயே", "என்ன உள்ளதோ அப்படியே", "அது எந்த நிலையிலிருப்பினும்" என்ற அடிப்படையில் 20.12.2024 அன்று ஏல விற்பனை செய்யப்படும் என்று பொதுமக்களுக்கு குறிப்பாக கடன்தார்/உத்திரவாதிக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

சொத்தின் உரிமையாளர் பெயர்	M/s.ஸ்படிகம் மினரல் வாட்டர்
எந்திரங்களின் விபரம்:- எந்திரங்களின் பட்டியல் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. **BOTTLE WASHER:** Bottle Washer with 0.25HP Motor 2Nos. and accessories. **Movable Conveyor:** Movable roller conveyor with accessories. Width: 14", Length: 101" - 1No., Length: 220" - 1No. **R.O.PLANT: i) Sand Filter:** Sand filter made of 316SS material with accessories. **ii) Carbon Filter:** Sand filter made of 316SS material with accessories. **iii) High Pressure Pump:** Make: Grundfos, Capacity: 7.5KW. **iv) Micron Filter:** 5, 1 & 0.5 Micron filter with SS Pipeline, 4 filters, pressure vessels, membrane, chemical waste tank, recycling pump, UV lamp (bacteria cleaner) and all other accessories. **v) Ozonator:** Ozonator with CRI & Vacuum pump for both 10,000 litre storage tank. **vi) Storage Tank:** 10,000litre storage tank 2 Nos. made out of 316SS material with pipeline, valves and all other accessories. **FILLING SECTION: i) Manual Filling:** Manual Filling machine made out of 316SS material and all other accessories. **ii) Pouch Filling:** Pouch filling machine with all accessories. Capacity: 50Packs/Min. **iii) Tank:** 500 litre Tank made out of 316SS material with pumps, uv detector, oil micron filter and other accessories. iv) Heating Machine v)Bar Coding Machine **vi) Automatic Filling Machine:** Automatic filling machine with 0.1micron filter, pumps, motors, uv detector, conveyor, panel drives and all other accessories. **vii) Shrinking Machine:** Shrinking machine with 22KWmotor, conveyor, stand and with accessories. Model: BS-5540M **Compressor:** Mecco Compressor with 2HP motor and accessories. Capacity: 220Litre. 5KVA servo stabilizer with accessories. Bore well and sump tank with 3HP motor 2Nos. and accessories. **Air Conditioner:** Make: LG, Capacity: 1.5 Ton, Four wheel movable trolley. **Generator:** 82.5KVA KOEL make genset with Koel make engine and alternator, Battery, Panel, Fuel tank with acoustic enclosure, base mounting plate and all other accessories. **Engine Details:** Type: 4R1040 TA, S.No. 4H.3555/1220344, Year: 2012, Power: 105HP. **MICRO-BIOLOGICAL LAB:** Refrigerator: Make: Godrej, Capacity: 160Litres. Laminar Air Flow – 1No, Colony Counter – 1No, UV-Chamber – 1No, Micro Controller – 1No, Incubator – 4No, Balance Machine – 2No, Auto Clave – 2No, Hot woven Chamber – 1No, Hot Air oven – 1No, Digital Spectrometer – 1No, Magnetic Stirrer – 1No, PH Meter – 1No, TDS Meter – 1No, Heating Chamber - 1No, Digital Nephelometer – 1No, Steam Path Meter – 1No, Hot Plate – 1No, Distilled water equipments such as test, tubes, apparatus, trays, water heater, stands etc.,	
நிர்ணயிக்கப்பட்ட தொகை	ரூ.27,46,000/- (ரூபாய் இருபத்தேழு லட்சத்து நாற்பத்தாறாயிரம் மட்டும்)
முன் வைப்புத் தொகை (EMD)	ரூ.2,74,600/- (ரூபாய் இரண்டு லட்சத்து எழுபத்து நான்காயிரத்து அறுநூறு மட்டும்) EMD தொகை 19.12.2024 அன்றோ அதற்கு முன்பாகவோ 04:00 PM வரை செலுத்தப்பட வேண்டும்.
ஏல அதிகரிப்புத் தொகை	ரூ.50,000/-
இ-ஏல நேரம் மற்றும் தேதி	20.12.2024 அன்று 02:00 PM முதல் 03:00 PM வரை (5 நிமிடம் தன்நீட்சியுடன் விற்பனை முடியும் வரை)
வங்கிக்கு தெரிந்த விவரங்கள்	ஏதுமில்லை

விற்பனை பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தி சௌத் இந்தியன் வங்கி லிட் (Secured Creditor)-ன் இணையதளம் அதாவது www.southindianbank.com-ல் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை பார்க்கவும். Email Id: info@bankauctions.in என்ற இமெயில் மற்றும் https://bankauctions.in என்ற இணையதளத்திலும் விபரங்களை அறியலாம். சொத்து ஆய்வு, இ-ஏல நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் அல்லது ஏலங்களை சமர்ப்பித்தல் ஆகியவை பற்றி மேலும் விபரமாக அறிவதற்கு, தி சௌத் இந்தியன் வங்கி லிட், 1) திரு.T.தினேஷ் (மொபைல் எண்.8056531536) அல்லது 2) திரு.R.அருண்குமார் (மொபைல் எண்.9894647220) ஆகியோரை தொடர்பு கொள்ளவும்.

இடம்: மதுரை அங்கீகாரம் பெற்ற அலுவலர்

திண்டுக்கல்லில் எஸ்டிபிஐ கட்சியினர் ஆர்ப்பாட்டம்

திண்டுக்கல், நவ. 8: அமரன் திரைப்படத்தை தடை செய்ய வலியுறுத்தி, திண்டுக்கல்லில் எஸ்டிபிஐ கட்சியினர் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திண்டுக்கல் வட்ட சாலை (ரவுண்ட் ரோடு) பகுதியிலுள்ள திரையரங்கில் நடிகர் சிவகார்த்திகேயன் நடித்த அமரன் திரைப்படம் வெளியிடப்பட்டிருக்கிறது. இந்தத் திரைப்படம், சிறுபான்மை சமூகத்தின் மீது வெறுப்பை ஏற்படுத்தும் வகையிலும், மத நல்லிணக்கத்துக்கு எதிராகவும் அமைந்திருப்பதாகக் கூறி எஸ்டிபிஐ கட்சியினர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில், இந்தத் திரையரங்கம் முன் அமரன் திரைப்படத்தை தடை செய்யக் கோரி எஸ்டிபிஐ கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதற்கு அந்தக் கட்சியின் திண்டுக்கல் கிழக்கு மாவட்டத் தலைவர் அபுதாஹீர் தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தின் போது, அமரன் திரைப்பட நடிகர்கள் சிவகார்த்திகேயன், கமல்ஹாசன் ஆகியோரின் உருவப் படங்களை எரித்தும், திரைப்படத்தை தடை செய்யக் கோரியும் முழக்கமிட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் 50–க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

மின் கோபுரத்தில் ஏறி தொழிலாளி தர்னா

நத்தம், நவ. 8: திண்டுக்கல் மாவட்டம், நத்தம் அருகே தனது கோரிக்கைகளை வலியுறுத்தி மின் கோபுரத்தில் ஏறி தையல் தொழிலாளி வெள்ளிக்கிழமை தர்னாவில் ஈடுபட்டார்.

நத்தம் அருகேயுள்ள சேத்தூர் ஊராட்சிக்குள்பட்ட கணவாய்பட்டியைச் சேர்ந்தவர் சதீஷ் பாண்டி (36). தையல் தொழிலாளி. இவருக்கு மனைவியும், இரு மகன்களும் உள்ளனர். கடந்த 7 ஆண்டுகளுக்கு முன்பு இவரது மனைவி பிரிந்து சென்று விட்டார்.



மின் கோபுரத்தின் மீது ஏறி தர்னாவில் ஈடுபட்ட சதீஷ்பாண்டி.

இந்த நிலையில், நத்தத்தை அடுத்த குட்டுப்பட்டி வெங்கல நாச்சியம்மன் கோயில் அருகேயுள்ள உயரழுத்த மின் கோபுரத்தில் சதீஷ் பாண்டி ஏறி போராட்டத்தில் ஈடுபட்டார். தகவல் அறிந்து அங்கு வந்த நத்தம் போலீஸாரும், தீயணைப்புத் துறையினரும் அவருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். அப்போது, தனக்கு சேத்தூர் ஊராட்சியில் இலவச வீடு கட்டித் தர வேண்டும். மேலும், எங்கள் குடியிருப்புப் பகுதியில் குரங்குகள் தொல்லை அதிகமாக உள்ளது. இதுகுறித்து உடனடியாக நடவடிக்கை எடுத்தால் கீழே இறங்குவேன் என அவர் கூறினார்.

பிறகு நத்தம் தீயணைப்பு வீரர்கள் சரவணன், அம்சராஜன், சேகர், அதிமுக மாவட்ட மாணவரணி இணைச் செயலர் அசாருதீன், நத்தம் காவல் ஆய்வாளர் தங்கமுனியசாமி ஆகியோர் அவருடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து மின் கோபுரத்தில் இருந்து அவர் கீழே இறங்கினார். இதனால் அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.